**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரக்கோணம்**

**முன்னிலை**: செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,

நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),

**அரக்கோணம்.**

2026ம் ஆண்டு மார்ச் 09ம் நாள் திங்கள்கிழமை

**C.C.No.58/2025**
**(CNR.No.TNRP09-000202-2025)**

**அரசுக்காக,**
**உதவி ஆய்வாளர்,**
**அரக்கோணம் நகர காவல் நிலையம்,**
குற்ற எண். 537/2024. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. அரவிந்தகுமார், வயது–28,
த/பெ. தட்சணாமூர்த்தி,
நெ. 68/39, ராஜாஜி முதல் தெரு,
சுவால்பேட்டை,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. சர்வின், வயது–32,
த/பெ. ராஜன்,
நெ.24, டிபி ரோடு,
கிருஷ்ணாம்பேட்டை,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம். ... எதிரிகள்

இவ்வழக்கு 09.04.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 09.03.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர்

தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கௌரிசங்கர் அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

28.10.2024ம் தேதி இரவு 11.30மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நேருஜி நகரில் உள்ள புகார்தாரர் கார்த்திகா வீட்டின் முன்பு எதிரிகள் சேர்ந்து கொண்டு புகார்தாரர் கார்த்திகா மற்றும் சாட்சிகள் முரளி, நித்தியானந்தத்தை பார்த்து தேவிடியா பசங்களே உங்கள் குடும்பத்தை ஒழித்துவிடுவேன் என்று மிரட்டியும், எதிரிகள் சாட்சி முரளியை செங்கல்லால் தாக்கினார்கள் என்றும், 1வது எதிரி காப்பால் சாட்சி நித்தியானந்தத்தின் தலை, காது, கண்ணத்தில் அடித்தும், 1வது எதிரி, புகார்தாரர் கார்த்திகாவை வலது பக்க தலை, நெற்றியில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே எதிரிகளாகிய இருவரும் BNS பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3)ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிகளுக்கு BNSS பிரிவு 230 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் 1வது எதிரி மீது BNS பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3)ன் கீழும், 2வது எதிரி மீது BNS பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3)ன் கீழ் முதல் நோக்கு தோன்றியதால் BNSS பிரிவு 263–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்தமையால் BNSS பிரிவு 265–ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு</u>:–

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி–1 முதல் பட்டியல் சாட்சி–7 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு, பட்டியல் சாட்சி–2, பட்டியல் சாட்சி–4, பட்டியல் சாட்சி 5, பட்டியல் சாட்சி 6, பட்டியல் சாட்சி–7 வரை விசாரிக்காமல் விட்டொழிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக அரக்கோணம் நகர காவல் நிலைய இரண்டாம் நிலை காவலர் அசோக்குமார் பட்டியல் சாட்சி–8 ஆக சேர்க்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.2 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசுதரப்பில் சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>:–

அ.சா.1 கார்த்திகா, அ.சா.2 நித்தியானந்தம் ஆகியோர் அம்மா மகன் ஆவார்கள். 29.10.2024ம் தேதி உதவி ஆய்வாளர் நாராயணசாமி நிலைய பொறுப்பில் இருந்தபோது அரக்கோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக இருந்த கார்த்திகா க/பெ. முரளி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.537/2024 BNS பிரிவுகள் 296(பி), 115(2), 118(1), 351(3)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யதுள்ளார்.

6. பிறகு வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவபிரகாஷ், கணேசன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பிறகு பட்டியல் சாட்சி 1முதல் 6 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் எதிரிகள் மீது கைது நடவடிக்கை எடுக்கவில்லை.

7. கார்த்திகா, நித்தியானந்தம், முரளி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கேத்தரின் விசாரணை செய்து அ.சா.1 கார்த்திகா, அ.சா.2 நித்தியானந்தம், பட்டியல் சாட்சி 2 முரளி ஆகீயோருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.1ன் கார்த்திகாவின் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.2 நித்தியானந்தத்தின் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும், பட்டியல் சாட்சி 2 முரளி விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்துள்ளார். மருத்துவரின் காயச்சான்றிதழ்யின் அடிப்படையில் இவ்ழக்கின் பிரிவுகளான 296(பி), 115(2), 118(1), 351(3) என்பதை 296(பி), 115(2), 118(2), 351(3) என்று பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளார்.

8. விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் உதவி ஆய்வாளர் நாராயணசாமி விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

9. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(b) கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில்

சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

10. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்**:–

எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(பி), 115(2), 118(2), 351(3)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

12. எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையானது அரசு தரப்பினை சார்ந்துள்ளது என்று BSA சட்டப்பிரிவு 104 இன் கீழ் காணப்படுகிறது.

14. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுதரப்பில், கார்த்திகா அ.சா.1 ஆகவும், நித்தியானந்தம் அ.சா.2 ஆகவும், இரண்டாம்நிலை காவலர் அசோக்குமார் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 கார்த்திகாவின்

கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், அ.சா.1 கார்த்திகாவின் விபத்து பதிவேடுநகல் மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.6, அ.சா.2 நித்தியானந்தத்தின் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.7, பட்டியல் சாட்சி 2 முரளி விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.8 மற்றும் பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.9 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

15. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 கார்த்திகா தான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன் என்றும் பட்டியல் சாட்சி 2 முரளி தனது கணவர் என்றும், அவர் சென்ற வருடம் இறந்துவிட்டதாகவும், 2024ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. இரவு 11.30 மணிக்கு சவால்பேட்டைக்கு நானும், எனது மகள் மற்றும் மகன் சென்றபோது யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் எங்களை தாக்கினார்கள். சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தோம் என்றும் தற்போது எனக்கும் எதிரிகளுக்கும், எந்த பிரச்சனையும் இல்லை. எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதில் எனக்கு ஆட்சேபேனை இல்லை என்றும் போலீசார் என்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 தான் அரக்கோணத்தில் வசித்து வருவதாகவும், அ.சா.1 கார்த்திகா எனது அம்மா என்றும், பட்டியல் சாட்சி 2 முரளி எனது அப்பா என்றும், சென்ற வருடம் எனது தகப்பனார் இறந்துவிட்டதாகவும், 2024ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. இரவு 11.30 மணிக்கு சவால்பேட்டைக்கு தான், எனது பெற்றோர்களுடன் சென்றபோது யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் எங்களை தாக்கியதாகவும், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தாகவும் தற்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும், எந்த பிரச்சனையும் இல்லை என்றும் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதில் எனக்கு ஆட்சேபேனை இல்லை என்றும் போலீசார் என்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 வரை அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் இரண்டாம் நிலை காவலர் அ.சா.2 சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது.

18. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட அ.சா.1

தனது சாட்சியத்தில் எதிரிக்கு எதிராகவும், எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசி தாக்கி மிரட்டியதாக அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 வழக்கின் புகாருக்கோ அல்லது குற்ற இறுதி அறிக்கைக்கோ ஒத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.3 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால் அவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்ததாக கருத இயலாது என்பதாலும் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் வகையில் சாட்சிகள் இல்லாததாலும், எதிரிகள் மீது Bns பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3) ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

19. இறுதியாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிகளுக்கு எதிரான Bns பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3)ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம், சான்றாவனங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என்று BNSS 271(1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

20. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, எனவே சான்று பொருள் பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்குகிணங்க தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆண்டு மார்ச் 9ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ),
அரக்கோணம்.

**இணைப்பு**:

1. **அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்**:

| | |
|---|---|
| அ.சா.1 | கார்த்திகா |
| அ.சா.2 | நித்தியானந்தம் |
| அ.சா.3 | அசோக்குமார் ( இரண்டாம் நிலை காவலர்) |

2. **<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்</u>**:

| **Exhibits** | **Date** | **Description of Documents** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.11.2024 | புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 கார்த்திகாவின் கையொப்பம். |
| அ.சா.ஆ.2 | 18.11.2024 | புகார் வாக்குமூலம். |
| அ.சா.ஆ.3 | 18.11.2024 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 09.04.2025 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.5 | 09.04.2025 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.6 | 09.04.2025 | அ.சா.1 கார்த்திகாவின் விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று. |
| அ.சா.ஆ.7 | 09.04.2025 | அ.சா.2 முரளி விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று. |
| அ.சா.ஆ.8 | 09.04.2025 | அ.சா.3 நித்தியானந்தம் விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று. |
| அ.சா.ஆ.9 | 09.04.2025 | பிரிவு மாற்று அறிக்கை. |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**: இல்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:–** இல்லை.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,
அரக்கோணம்.

**நகல்கள்:–**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2.

3.காவல் ஆய்வாளர், நகர காவல் நிலையம்.

**குறிப்பு:–**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.